## இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை - 2015

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 50(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் தீர்மானிப்பதற்கான அதிகாரத்தை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் நடவடிக்கைகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஒத்ததாக உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கிய சகல பெறுமதிகள் தொடர்பாகவும் ஒப்பீட்டுத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களது குறிப்புகளில் ஒப்பீட்டுத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

2012 ஆம் ஆண்டிற்கான கட்டிட வாடகைக் கொடுப்பனவாகிய ரூபா 8,033,271 சர்ச்சைக்குரியதானதால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதாக கணக்கிலிடப்படவோ அல்லது நிதிக்கூற்றுக்களில் போதியளவு வெளிப்படுத்தப்பட்டோ காட்டப்படவில்லை. எவ்வாறாயினும், அதிகாரசபையானது 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியன்று அத்தொகையைக் கொடுப்பனவு செய்திருந்தது.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்பாந்தோட்டை சூரிய சக்தி உற்பத்தி வருமானம் மற்றும் இந்துரன சிறிய அளவிலான நீர் மின்சார உளை வருமானம் என்பன முறையே ரூபா 42,049,876 மற்றும் ரூபா 3,836,217 என கணக்கிலிடப்பட்ட போதும், இன்வொயிசின் பிரகாரம் வருமானம் அவை முறையே ரூபா 39,129,831 மற்றும் ரூபா 3,431,567 ஆகியமையால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 3,324,695 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) அம்பாந்தோட்டை மற்றும் இந்துரன வலு உற்பத்தி மூலம் பெற வேண்டிய வருமானமாகக் கணக்கிலிடப்பட்ட தொகை ரூபா 12,981,175 ஆகும். எவ்வாறாயினும், இன்வொய்சின் பிரகாரம் பெற வேண்டிய வருமானம் ரூபா 16,560,440 ஆகும். இதன் விளைவாகப் பெற வேண்டிய வருமானம் ரூபா 3,579,265 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது ரூபா 218,670 செலவில் கெப் வண்டி ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கெனோபி மூலதனமாக்கப்பட்டபோதும், மீளாய்வாண்டிற்குரிய தேய்மானமாகிய ரூபா 32,800 கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அம்பாந்தோட்டை சோலர் பார்க் செயற்திட்டத்திற்காக மஹாவலி அதிகார சபையிடமிருந்து 2011 ஜுலை 28 ஆந் திகதியன்று சுவீகரிக்கப்பட்ட 50 ஏக்கர் காணியை மீளாய்வாண்டிலேனும் மதிப்பீடு செய்து அதனை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கவில்லை.

(உ) உடப்பில் உள்ள ரூபா 2.244,800 கிரயமுடைய காற்றாடிக் கோபுரம் 2010 ஒக்டோபரில் விழுந்ததால் இழப்பு ஏற்பட்டிருந்ததுடன், 5 ஆண்டுகளுக்கு அதிகமாக செயலற்றுமிருந்தது. இச் சொத்துக்களது தேறிய பெறுமதியாகிய ரூபா 601,875 ஐப் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு 2016 செப்டம்பர் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த 1 ஆண்டிற்கு கூடிய மற்றும் 4 ஆண்டுகளுக்குக் குறைவான மீதிகளாகிய ரூபா 3,486,182 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 9,275 மீதி என்பவற்றை அறவிடுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு சேர்ந்து நின்ற செலவினக் கணக்கில் காட்டப்பட்டிருந்த தொகை ரூபா 11,579,596 ஆகும். இதில் ரூபா 7,622,186 தொகையானது 2011 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், அத்தொகையைத் திர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானத்தில் செலவு வைப்பதற்கோ மீளாய்வாண்டு முடிவுவரை அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிலைபெறுதகு வலு அதிகாரசபை அதிகாரச்சட்டம் | |
| 7(1),8(1), 42(1) ஆம் பிரிவுகள் | புதுப்பித்தலுக்காக வலுக் கையிருப்பு (RENEWABLE ENERGY INVENTORY) வலுவைக் குறிக்கும் வரைபடம், வலு அபிவிருத்தித் திட்டம் மற்றும் இலங்கை வலு அபிவிருத்தித் துறையின் செயலாற்றல் தொடர்பான அறிக்கையைத் தயாரித்து அமைச்சருக்கு அனுப்பி வைத்திருக்கவில்லை. |
| (ஆ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | |
| 14 (1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கடன் 2015 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவிலலை. |

(இ) இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 108 | இழப்பு மற்றும் நட்டங்களுக்கான பதிவேடு பேணப்படவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 1645 | அதிகாரசபையிடம் 18 வாகனங்கள் இருந்தன. அதில் 8 வாகனங்களது எரிபொருள் நுகர்வு அவ்வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுகளிலிருந்தே சம்பவப் பதிவேடுகளில் பதியப்படாதிருந்தன. அத்துடன், எஞ்சிய 8 வாகனங்களது எரிபொருள் நுகர்வும் சில ஆண்டுகளாகப் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 756(i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) திறைசேரிச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சுற்றறிக்கைப் பிரகாரம் நிலையான வைப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | கணனிகள், துணைப்பாகங்கள், மென் அணி சம்பந்தமாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2015 ஜுலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின்போது 9 சந்தர்ப்பங்களில் நிறைவேற்றுதரத்தைச் சேராத உத்தியோகத்தர்களுக்கு முற்பணமாக ரூபா 100,000ஐ விஞ்சும் விதத்தில் வழங்கப்பட்டிருந்தது. |

(உ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (iv) ஆம் இலக்கச் சுற்றறிக்கை | பணிப்பாளர் நாயகம் உட்பட அதிகாரசபையின் 6 உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் வரம்பிற்குக் கூடுதலாக 4.088.5 லீட்டர் எரிபொருள் மீளாய்வாண்டின்போது வழங்கப்பட்டிருந்தது. அதன் பெறுமதி ரூபா 478,373 ஆகும். |

(ஊ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய PED/45 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய பொறுப்புகள் தொடர்பான கூற்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4. நிதிசார் மீளாய்வு

### 4.1 செயற்பாட்டு நடவடிக்கைகள்

2007 செப்டெம்பர் 28 தொடக்கம் 18 மாதங்களுக்குள் 3 பிரட்டோடைப் மின்சார வாகனங்களைப் புதுப்பிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின்போது வெளி நபர் ஒருவருக்கு ரூபா 7,888,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 செப்டம்பர் 30 ஆந் திகதி வரையும் ஒரு வாகனத்தையேனும் புதுப்பிப்பதற்கு அந்நபரால் இயலாது போனதுடன், 7 ஆண்டுகள் கடந்தும் 3 வாகனங்களையும் புதுப்பித்துத் திருப்பி பெறுவதற்கோ அல்லது

கொடுப்பனவு செய்த பணத்தை திருப்பிப் பெறுவதற்கோ சட்ட ரீதியாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

அதிகாரசபைக்குச் சொந்தமான 16 வாகனங்களுள் 2 கெப் வண்டிகள் ஏறக்குறைய 1 ½ ஆண்டுகளாக பயன்படுத்தப்படாது வாகனப் பிரிவில் காணப்பட்டதுடன். ஒரு வண்டிக்கு டயர் பொருத்துவதற்கென 2015 சனவரி 26 ஆந் திகதியன்று ரூபா 113,103 செலவிடப்பட்டிருந்தது. மற்றைய வாகனத்திற்குச் சாரதி காணப்படாமை, அதிக எரிபொருள் நுகர்வு மற்றும் வீதிக்குப் பொருத்தமற்றவை போன்ற காரணத்தால் அவை பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

### 4.3 தாமதமாகிய செயற்திட்டங்கள்

கபரகல எனும் இடத்தில் காற்றாடிக் கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு 2011 ஆம் ஆண்டின்போது வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணம், உபகரணக் கிரயம் மற்றும் வேலைத்தளப் பரிசீலனைக் கட்டணம் என முறையே ரூபா 416,875, ரூபா 576,500, ரூபா 833,750 என மொத்தமாக ரூபா 1,827,125 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந் நிர்மாண வேலையானது 2016 செப்டெம்பர் 30 ஆந் திகதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன், தாமதம் காரணமாக கோபுரத்தை நிர்மாணிப்பதன் மூலம் தரவுகளைப் பெறும் பணியானது எதிர்பார்த்தவாறு பூர்த்தி செய்யப்படாது போயிற்று.

### 4.4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்திருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் அதிகாரசபைக்கென அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணி 136 ஆகும். 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 106 பதவியணியினர் மாத்திரமே இருந்தனர். அதற்கமைய, பதவியணியில் 30 வெற்றிடங்கள் நிலவியதுடன், இவ் வெற்றிடங்களில் பிரதான பதவிகளான 2 பணிப்பாளர் பதவிகள், 4 பிரிவு தலைமைப் பதவிகள் மற்றும் 11 முகாமைத்துவப் பதவிகள் காணப்பட்டதால் அதிகார சபையின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அது தடையாக விளங்கியமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2015 ஆம் ஆண்டின்போது வழங்கப்பட்ட பயிற்சிகள் தொடர்பான 28 கோவைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதில் 26 கோவைகளில் பயிற்சியின் பின்னர் உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணங்கள் 133 மற்றும் 134 என்பவற்றில் உள்ள ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் DMA/2009(1) ஆம் இலக்கமுடைய 2009 ஜுன் 09 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தில் உள்ளகக் கணக்காய்வு நடைபெறுவது அவசியமெனினும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கென பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் அடங்கலாக அதன் பதவிகளுக்கான உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பிரிவு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்பாடுகள், என்பவற்றிற்கு மீளாய்வாண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 134,243,000 ஆகும். அதில் ரூபா 79,369,233 செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய 41 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 54,873,767 குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, எற்பாடு செய்யப்பட்ட நிதியை நோக்கங்களை நிறைவேற்றுவதன் பொருட்டு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) பாதீட்டின் மூலம் மூலதனச் செலவினத்திற்கென ரூபா 10,000,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 5,254,951 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, மூலதன நிதியேற்பாட்டின் 47 சதவீதமான ரூபா 4,745,049 குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.

(இ) காணி மற்றும் கட்டிடங்களைச் சுவீகரிப்பதற்கு பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின்போது மூலதனச் சேமிப்புகளில் ரூபா 49,185,376 அதற்கெனப் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் இணக்கஞ் செய்தபோது 32 செலவின விடயங்களில் 10 முதல் 104 சதவீதம் வரையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதன் மூலம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) பாதீட்டுக் கட்டுப்பாடு | சாத்தியமானதாகத் தயாரிக்கப்பட்டு கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) சொத்து முகாமைத்துவம் | சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களை மதிப்பிடுதல், பதிவு செய்தல், பாதுகாத்தல் அதிகார சபையின் வளங்களை நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்கென வினைத்திறனுடன் பயன்படுத்தாமை. |
| (இ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | கடன்பட்டோர் மற்றும் பெற வேண்டிய தொகை என்பவற்றைத் தாமதமின்றிச் சேகரிக்காமையும் கணக்கிலிடாமையும் |
| (ஈ) மனிதவள முகாமைத்துவம் | அதிகாரசபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான கடமைகள் மற்றும் அளவு என்பவற்றிக்கமைய மனிதவள முகாமைத்துவம் மேற்கொள்ளப்படாமை. |
| (உ) செயற்திட்ட அமுலாக்கல் | செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகச் செயற்திட்டப் பணிகளை நோக்கத்திற்கு இணையாக அமுலாக்காமை |

| | | |
|---|---|---|
| (ஊ) | கணனி மயப்படுத்திய பேரேட்டு நடைமுறை | பல்வேறு செலவின விடயங்களின் கீழ் ஏற்படும் செலவினங்களைப் பகுப்பாய்வு செய்யக்கூடியவாறு கணனிப் பேரேடுகளை அறிமுகம் செய்யாமை. |
| (எ) | கணக்கீடு | நாட்குறிப்புகளைத் தயாரித்தல் |